படித்துவிட்டு வருகிற வக்கீல்களைவிட விவரம் தெரிந்து வந்திருக்கிறார்கள். இங்கேயிருக்கின்ற வக்கீல்கள் தவறாகக் கருதக் கூடாது. இன்னும் சில இடத்திலே புதியதாக வந்தவர்கள்கூட விவரம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் பட்டம் பெற்று விட்டோம், அதனாலே உங்களுக்கு மட்டும்தான் எல்லாம் தெரியும் என்றில்லை. உங்களுக்குத் தெரியும். ஆனால் மற்றவர்களும் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் மற்றவர்களுக்கு இந்த உரிமைகள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கோபாலகிருஷ்ணன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதப்பட்ட பத்திரங்கள் பதிவுக்காக உள்ளே சென்று அதன் உரிமையாளர்கள் கையில் திரும்ப வரும்போது அது கிழிந்த நிலையிலும், கசங்கிய நிலையிலும் வருகிறது. அதனால் அந்த ஏழை விவசாயி மிகுந்த மனச் சோர்வுக்கு ஆளாக்கப்படுகிறார். இந்த நிலையை அமைச்சரவர்கள் மாற்றி அமைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி வருவதற்கு வாய்ப்பு இல்லை. எங்கேயாவது அப்படி இருந்தால் அது வராமல் இருப்பதற்கு அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

262—

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பொறியியல் கல்லூரி ஏற்படுத்துதல்.

*14608—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அல்லது மற்றொரு நகரத்தில் 1992-93-ல் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தனியார் இன்சினியரிங் கல்லூரிகளில் அதிகமாக நன்கொடை வாங்குவதனால் தஞ்சை மாவட்டத்திலே ஒரேயொரு தனியார் கல்லூரி இருக்கிறது. அதிலே ஏழையெளிய மாணவர்கள், மெரிட்டில் வர முடியாத மாணவர்கள் நன்கொடை காரணமாக பயில முடியவில்லை. ஆகவேதான் கும்பகோணம் அல்லது பேராவூரணி, அந்தப் பகுதிகளில் ஒரு இன்சினியரிங் கல்லூரியை துவக்கினால் அது மிகவும் நலமாக இருக்குமென்ற காரணத்தினால்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நம்முடைய தேசிய கல்விக் கொள்கையில் உயர் கல்வி நிறுவனங்களை அரசு ஆரம்பிப்பது இல்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு யூனியன் பட்ஜெட்டிலேகூட கல்விக்கான தொகையை உயர்த்தியிருக்கிறோமே தவிர உயர்நிலைக் கல்விக்கான தொகையை குறைத்து இருக்கிறோம். போன வருடத்தைவிட இந்த வருடம் குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆக அதுவே எல்லோருக்கும் விளக்கம் கொடுப்பதற்குரிய ஒரு நிலையைக் காட்டும் என்று நான் நம்புகிறேன். ஆகவே உயர்கல்விக்காக அரசு பணத்தை செலவு செய்வது என்பது, அதுவும் புதிதாக செலவு செய்வது என்பது இல்லை என்பது தான் இந்தக் கொள்கையினுடைய பொருள் ஆகும். அது மட்டும் அல்லாது தமிழகத்தைப் பொறுத்த மட்டில் கடும் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. அந்த சூழ்நிலையில் தமிழக அரசு புதிய கல்லூரியை ஆரம்பிக்கின்ற அல்லது உதவி பெறுகின்ற கல்லூரியை ஆரம்பிக்கின்ற நிலையில் இல்லை. சுயநிதி கல்லூரியைப் பொறுத்தமட்டில் நடந்து கொண்டிருக்கின்ற கல்லூரியையே மூடலாமா என்ற நிலையை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மாணவர்களை சேர்ப்பது இல்லை என்று இன்றைக்கு அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பொருளாதார நிலையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் அறிவேன். அதே நேரத்திலே இந்த ஆண்டு முடியாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது இந்த கோரிக்கையை அரசு பரிசீலிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அடுத்த ஆண்டு பரிசீலிப்போம்.